பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 01 2026** **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டு நலனுக்கே முன்னுரிமை என்ற உணர்வோடு அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கேரள முன்னாள் முதலமைச்சர் மறைந்த வி எஸ் அச்சுதானந்தன், மறைந்த நடிகர் தர்மேந்திரா உட்பட ஐந்து பேருக்கு பத்ம விபூஷன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முன்னிலை வகிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக பேச்சுக்கள் நாளை மறுநாள் இறுதி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5. நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 154 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

--இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>

நாட்டு நலனுக்கே முன்னுரிமை என்ற உணர்வோடு அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டின் 77-ஆவது குடியரசு தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் வாயிலாக நாட்டு மக்களிடையே உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்வதாக குறிப்பிட்ட அவர், நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய லட்சியங்களை கொண்டு நமது அரசியலமைப்புச் சட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

தேசிய பாடலான வந்தே மாதரம் இயற்றப்பட்ட 150-ஆவது ஆண்டு கொண்டாட்டங்களும் தற்போது நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

இந்த பாடல் நாட்டு மக்களிடையே தேசப்பற்றை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மகாகவி பாரதியாரின் ''வந்தே மாதரம் என்போம்'' என்ற பாடலையும் அவர் மேற்கோள்காட்டி பேசினார்.

நமது பாதுகாப்புப்படை வீரர்கள் விழிப்புடன் கடமையாற்றி வருவது பாராட்டுதலுக்குரியது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் தற்போது முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முத்திரை பதித்து வருவதாகவும் அவர் கூறினார்.

தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய குடியரசுத் தலைவர், இதிலும் பெண்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளதாக கூறினார்.

பஞ்சாயத்துராஜ் அமைப்புகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

உலக விளையாட்டு அரங்கில் இந்திய பெண்கள் சாதனை படைத்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளிகள் மூலம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் விவசாயிகளின் மேம்பாட்டில் மத்திய அரசு தனி கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

81 கோடிக்கும் மேற்பட்ட ஏழை மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இளையோரின் நலனிலும் மத்திய அரசு கூடுதல் அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாகவும், விரைவில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும் குடியரசுத் தலைவர் கூறினார்.

சர்வதேச தரத்திற்கு இணையிலான கட்டமைப்பு வசதிகள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு, நான்கு புதிய தொழிலாளர் நலச்சட்டங்கள் போன்ற சீர்திருத்த நடவடிக்கைகள் வளர்ச்சியின் வேகத்தை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நம் நாடு தன்னம்பிக்கையுடன், பெருமைமிகு பாரம்பரிய உணர்வுடன் முன்னேற்றம் கண்டு வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையேயான இடைவெளி குறைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மக்கள் பங்களிப்போடு இலக்குகள் எட்டப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புத் துறையில் நமது திறனை ஆபரேஷன் சிந்தூர் உலகிற்கு எடுத்துரைப்பதாகவும் அவர் கூறினார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையில் நாம் பயணிப்போம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உலகில் அமைதி நிலவ வேண்டும் என்ற நோக்கோடு இந்தியா செயல்பட்டு வருவதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<>>>>>

நடப்பாண்டிற்கான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கேரளாவின் முன்னாள் முதலமைச்சர் மறைந்த வி. எஸ். அச்சுதானந்தன், மறைந்த நடிகர் தர்மேந்திரா உட்பட ஐந்து பேருக்கு பத்ம விபூஷன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

விஜய் அமிர்தராஜ், நடிகர் மம்முட்டி, தமிழகத்தை சேர்ந்த கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி, மயிலானந்தன், ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சர் திரு சிபு சோரன், உட்பட 13 பேர் பத்ம பூஷன் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சென்னை ஐ ஐ டி இயக்குனர் திரு காமகோடி, டாக்டர் ஹெச் வி ஹண்டே, எழுத்தாளர் சிவசங்கரி, காயத்ரி பாலசுப்பிரமணியன் - ரஞ்சனி பாலசுப்பிரமணியன் இணை, கே ராமசாமி, கே.விஜயகுமார், ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன், மருத்துவர் புண்ணிய மூர்த்தி நடேசன், ராஜ ஸ்தபதி காளியப்ப கவுண்டர், திருவாரூர் பக்தவத்சலம், ரோஹித் சர்மா, ஹர்மன் பிரீத் கவுர், நடிகர் மாதவன் உட்பட 113 பேர் பத்ம ஸ்ரீ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது தமது 57 வருட எழுத்துப்பணிக்கு கிடைத்த அங்கீகாரம் என்று எழுத்தாளர் சிவசங்கரி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — சிவசங்கரி - 62 Sec.)***

பத்ம ஸ்ரீ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று ராஜ ஸ்தபதி காளியப்ப கவுண்டர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — காளியப்ப கவுண்டர் — 70 Sec.)***

பத்ம விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முன்னிலை வகிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

காரைக்காலில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

இளையோர் அரசியலிலும் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக பேச்சுக்கள் நாளை மறுநாள் இறுதி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007-ஆம் ஆண்டு தொடங்கிய இப்பேச்சுக்கள் நாளை மறுநாள் நிறைவடைய உள்ளதாக பரஸ்பரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தக ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கது என்றும், மிகப்பெரிய அளவிலானது என்றும் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கருத்து தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 154 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 153 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Glenn Phillips 48 ரன் எடுத்தார்.

பும்ரா அபாரமாக பந்துவீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

--------------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி **207** ரன் வித்தியாசத்தில் ஒடிஷாவை வென்றது.

புவனேஷ்வரில் நடைபெற்ற இப்போட்டியில், **455** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடும், **2** விக்கெட் இழப்பிற்கு **47** ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்ஸை இன்று தொடர்ந்து ஆடிய ஒடிஷா அணி **247** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Anil Parida 98** ரன் எடுத்தார்.

சோனு யாதவ், சாய் கிஷோர், நித்திஷ் ராஜகோபால், வித்யூத் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

----------

தோஹா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா நான்கு தங்கம், ஐந்து வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

**<<<<<END>>>>>**